முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1154

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

26.11.2022, சனிக்கிழமை

1. பிரம்ம ஞான இரகசியம் அறிந்த
   பிரணவக்குடில் படைத்த ஆறுமுக அரங்கனே
   சரவணச்சுடரேற்றி கலியுகத்தையே
   சக்திமிகு ஞான யுகமாக மாற்றவந்த
2. வந்தநல் ஞான தேசிகனே
   வள்ளலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   சிந்தைபட ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 10 ம் நாள் 26.11.2022, சனிக்கிழமை)
   செப்பிடுவேன் அரங்கன் உன் புகழ் உலகறிய
3. அறியவே அரங்கன் உன் ஞானமும் தர்மமும்
   அகிலத்தையே மாற்றி அமைக்கக்கூடும்
   வறுமையும் உலக பேரிடர் துன்பங்களும்
   வல்லமைபட நீ செய்துவரும் தவத்தின் மூலமும்
4. தவபலத்தோடு உன் தர்மத்தின் மூலமும்
   தன்னிகரில்லா மாற்றம் கண்டு
   பெரும் பாதுகாப்பாக மண்ணுலகம்
   தேறி அற்புதம் காணும்
5. மகான் நீ படைக்கும்
   தொண்டர் படைகள் மூலமே
   ஜெகமெல்லாம் ஞானவான்கள் பெருகி
   சித்திமிகு ஞானிகள் ஆள உண்டான ஞானசித்தர் காலம்
6. உத்தமமாய் இத்தரை கண்டு இனிதே
   உலகமாற்றமாக அரங்கன் உன் அவதாரம் வழி பூர்த்தியாகும்
   ஆகவே உன்னை அறியும் மக்களுக்கு
   ஆற்றல்பட என் காட்சி உதயமாகும்
7. மண்ணுலகில் உன்னை தொடரும் அன்பர்கட்கு
   மகத்துவம்பட மரணம் வெல்லும் சக்தியும் கூடும்
   உத்தமமாய் உலகோர் உன்வழி தொடர்ந்தால்
   உலகம் சடுதி மாற்றம் பெரும்
   
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–